தட்டும் ஒலி). இந்நிலையில் இத்திட்டம் சரிவர செயல் படுத்தப்படவில்லை என்று கூறிய கருத்துக்கள் தவறானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டுக்கு, அதாவது 1992—93 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து வேட்டிகளையும், சேலைகளையும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் உள்ள ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு "மறைமலை நகர்—காமராஜர் இரயில் நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டாங்குளத்தூர்-சிங்கப் பெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு 'காமராஜர் நகர் இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு பிரிவினர்களிடமிருந்தும் அரசுக்கு வந்துள்ளன. மேலும் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர், நம் பாசத்திற்குரிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் 'காமராஜ் நகர் இரயில் நிலையம்' என்ற பெயர் நிரந்தரமாக அவ்விடத்திற்கு இட வேண்டுமென்று மறைமலை நகரிய மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அறிவித்திருந்தார்.

பிறகு, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு காமராஜர் நகர் இரயில் நிலையம் என்று பெயரிடச் சொல்லி போராட்டங்கள் மூலமும், தனிப்பட்ட முறையில் கடிதங்களின் மூலமும் அரசுக்கு அவ்வப்போது வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அமரர் இராஜீவ் காந்தி அவர்களிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கிற வகையிலும், நேற்று என்னைச் சந்தித்த காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுத்த இந்தக் கோரிக்கையினை நிறைவு செய்கிற வகையிலும், இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கு மதிப்புக்

கொடுக்கிற வகையிலும் மறைமலை நகர் இரயில் நிலையத்தை ''மறைமலை நகர்—காமராஜர் இரயில் நிலையம்'' எனப் பெயர் மாற்றம் செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி).

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மறைமலை நகரிலே, காமராஜர் நகரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றபோது, இராஜீவ்காந்தி அவர்கள்அங்கே வாழ்கிற அந்த நகரிய மக்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே நிரந்தரமாக ஒரு இரயில் நிலையம் இருக்கும் என்றும், அந்த இரயில் நிலையத்திற்குக் காமராஜர் இரயில் நிலையம் என்று பெயர் சூட்டப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள். அதை இரயில்வே இலாக்காவும் ஏற்றுக்கொண்டது. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது அந்தப் பெயரை மாற்றியிருந்தார்கள். இப்போது எங்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மறைமலை நகர்-காமராஜர் இரயில் நிலையம் என்று அங்கே பெயர் சூட்டியிருப்பதற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மறைமலை நகர் இரயில் நிலையத்திற்கு காமராஜர் பெயர் வைக்க வேண்டுமென்று நீண்ட பல வருடங்களாக நாம் போராடி வந்திருக்கிறோம். எங்களுடைய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் 50 ஆயிரம் பேர் சிறை சென்றோம், உண்ணா விரதம் இருந்தோம். அருமைத் தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் வைத்த காமராஜர் பெயரை வைக்க வேண்டுமென்று நாங்கள் உண்ணாவிரதம் இருந்தும், தி.மு.க. கொடுங்கோல் ஆட்சியில் உடனடியாக அந்தப் போர்டையும் அகற்றி, பிரிண்ட் செய்யப்பட்டிருந்த டிக்கட்டுகளையும் மாற்றி சர்வாதிகாரம் செய்தார்கள். அந்த நிலையைப் போக்கி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் இல்லை பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு).

திரு. ஆர். சிங்காரம்: அந்த நிலைமையையும் போக்கி நம்முடைய அருமைத் தலைவி, தமிழகத்தின் புரட்சித் தலைவி அவர்கள் எங்கள் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, தமிழகத்

1992 செப்டம்பர் 24] [திரு. ஆர். சிங்காரம்]

திலே உள்ள எங்களின் லட்சக் கணக்கான தொண்டர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அந்த இரயில் நிலையத்திற்கு காமராஜர் இரயில் நிலையம் என்று பெயரை வைத்ததற்காக எங்களுடைய உளப்பூர்வமான, இதயப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், இந்தப் போராட்டத்தில் சிறை சென்ற 50,000 பேருக்கும் மேற்பட்டவர்கள் மீது.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிஸ்கஷன் வேண்டாம்.

திரு. ஆர். சிங்காரம் : நன்றி சொல்லவேண்டும். கேசை ரெபர் செய்திருக்கிறார்கள். அந்த 50 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டவர்கள் மீது, எங்கள் மீது கொலையாளிகள், கொள்ளையடித்தவர்கள் என்றும் வழக்குகள் போடப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டு கொடுங்கோல் செய்தார்கள். அப்படிப்பட்ட அந்த வழக்குகளையெல்லாம் தமிழகத்தின் தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நீக்கி இருக்கிறார்கள். விடுதலை செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவும் எங்களுடைய இதயபூர்வமான நன்றியை, தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களின் சார்பாகவும் தமிழகத்தின் தொண்டர்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, நன்றி, நன்றி.

4. கவன ஈர்ப்பு.

சிதம்பரம் வட்டத்தில் காலரா நோய் பரவியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு ச. அழகிரி கொண்டு வருவார். திரு. ச. அழகிரி. (குறுக்கீடு) அந்த ஆட்சியில் இந்த மாதிரி வழக்குப் போட்டார்கள் என்று சொல்கிறார். அதைச் சொல்லாமல் என்ன செய்வார்கள் ? உட்காருங்கள். உட்காருங்கள். இல்லை. அதில் டிஸ்கஷன் போய்க்கொண்டேயிருக்கும். (குறுக்கீடு) தி.மு.க. ஆட்சியில் அந்தமாதிரி வழக்குப் போட்டார்கள் என்று சொல்கிறார். அந்த வழக்கை வாபஸ் வாங்கியதற்கு நன்றி என்கிறார். அதில் என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ச. அழகிரி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி உட்கார வேண்டும். அதேமாதிரி பரிதி இளம்வழுதி உட்கார வேண்டும்.